
உ

சிவமயம்



# நாகம்மை புகழ் மாலை

ஆக்கமும் தொகுப்பும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

**வேழமுகத்து விநாயகனைத் தொழ - வாழ்வு மிகுத்து வரும்**
**வெற்றிமுகத்து விநாயகனைத் தொழ - புத்தி மிகுத்து வரும்**
**வெள்ளைக்கொம்பன் விநாயகனைத்தொழ - துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே**
**அப்பமும் முப்பழம் அமுது செய்தருளிய தொப்பை அப்பனைத் தொழவினைஅறுமே**

# நாகம்மை புகழ் மாலை

**ஆக்கமும் தொகுப்பும்:**
**புலவர் நாகமணி விநாயகமூர்த்தி**
**சேனைக்குடியிருப்பு**

07.05.2012
ஈஸ்வரி வெளியீடு: 32

**விலை: 120/=**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# நாகதம்பிரான் பிரார்த்தனை

வெற்றிக்கு விநாயகரின் விளங்குதொந்தி நாணே
வேலவர்முன் னேசெல்லும் வெற்றியுறு நல்லரவே
அவுணர் புரமெரிக்க வரன்வளைத்த மேருமலைக்
கொற்றவில்லின் நாணே கோளர வேபோற்றி
வாளகிரி தனைச்சூழ்ந்த வாரியிலே மாயவன்றன்
நீளுமணிப் பாயலாய் நித்திரைசெய் தேகிடந்த
நாகமணி பொதிந்த நாகவர சேபோற்றி
நற்பாம்பு தாலாட்டும் நாயகியார் பார்பதிதன்
களபதனக் கச்சே காரிகைகுக் கங்கணமே
காதிலுறு குண்டலமே கவிக்குங்கொற் குடையே
வாசுகி யனந்தன் தக்கன் சங்கன் பதுமன்
குளிகன் மகாபதுமன் கார்க்கோடன்
என்னுமெட் டுவகை யெழில்நாகங் கள்போற்றும்
சகமனைத் துஞ்சுமந்த சமர்த்தர வேபோற்றி
ஏகவுட லைந்துதலை யெழில்நாக மேபோற்றி
வெண்மை நிறம்படைத்த வித்தக னேபோற்றி
நாகம் நால் சாதி அறுசாதி விரியனுடன்
வரிவண்டு வகையுடனே வளலைநால் சாதி
துவாதசக தேளுடன் சோடச மண்டெலியும்
நட்டுவக் காலி நாய் நரி தவளையுடன்
இருபது சிலந்தி எழிலோந்தி செவ்வட்டை
செங்குழவி செய்யான் கருங்குழவி வண்டுவகை
உமதுதிரு நாமமதை யோத வணுகாதே
நகதம்பி ரானே நல்ல சங்கு பாலகரே
அடிபணிந் தேனடியேன் அபய மபயம்
அரவர்க்கர சேயுன் னடைக்கலந் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

**ஓம் ஸ ஹஸ்ர சீர்ஷய வித்மஹே**
**விஸ்ணு கந்தாய தீமஹி**
**தந்தோ நாகப்ர சோதயாத்**

# நாகதம்பிரான்
# அகவல்

மாபெரு முலகில் வாழ்ந்திடு மக்கள்
யாவருந் துதிக்கும் நாகதம்பிரான் மேல்
சீர் பெறுமகவல் சிறப்புட னோதக்
கார்பெறு குஞ்சரக் கணபதி கார்க்க

கார்க்கவே வேணும் கமல நாமகளும்
நாவினில் இருந்து நமக்கு நன்றாக
நாக தம்பிரா னென நாள் தோறும் நினைந்தே
பாகுசேர் பால் பழம் பாங்குட னளித்தால்

பாரினி லெவர்க்கும் பாக்கியங் கொடுக்க
நேரிலே கண்முன் நீயென வருவாய்
கங்கை யணியுங் கமழ்சடை ஈசன்
கங்கண மாயுங் கழுத்தி லாரபரணமுமாய்

நாரி பாகன் நல் லணியாகி
பாரி லுள்ளோர்க்குப் பரகதி கொடுப்பாய்
உந்தனை அடியோம் உகப்புடன் பணிந்தோம்
நாகதம்பிரானே உனை நாணிப்பணிந்தோம்

சரணம் சரணம் நமஸ்தே நமஸ்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகதம்பிரான் காவியம்

1. அரியபுவி தன்னிலுயர் மதிவதன முடைய
ஆதியுமை சோதியுரு வாகியுல கெங்கும்
பிரிவினோடு கணநாதர் முனியிருஷி தேவர்
பங்கயன்மால் லிந்திரன் சரசோதி துணையாய்
தெரிவைகத் துருவீன்ற மைந்தர்புகழ் பாடச்
சீருலவு வலவைமண வாளனென வந்த
கரியின்முக முடையதிரு வைந்துகர ரென்னுங்
கணபதியை யொருபொழுதுங் கனவில் மறவேனே

2. கனவனச கொடியிடை தனதுமதி நுதலழகுக்
கற்பிலுருய ரிருமாது காசிபர்க் காகி
வனிதைகத் துருவென்னும் நாமமது வளருலகில்
அறிவுமிகு வெகுவான மைந்தர்களை யீன்று
அனவரத கிருபையொடு அருணனையுங் கெருடனையும்
அவனிதனி லடிமையாய்த் தனதுபணி செய்யென
அகங்காரங் கொண்டுமே அன்னவளு மோத
அருந்தவ ரொருவருலகங் னில்வந் தனரே

3. முனிவரொரு வேள்வியது செய்யவென் றெண்ணி
மூவுலகு தன்னிலுயர் கிருபையது கொண்டு
இனிமைதரும் கத்துருவின் மைந்தர்களை யங்கு
எட்டட்ட திக்கிலும் காவலது வைத்துப்
புனிதமொடு முனிவேள்வி செய்தமிர்த மீந்தபின்
பொங்கரவ மொட்டையுஞ் சங்கரன் தாங்க
வனிதையவ ளீன்றவிரு மதலையர்கள் பகையாய்
வளருலகில் வந்துதவு நாகதம்பி ரானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வந்துதவு சிந்தைநினை வானதெப் போது
மலைவாவி அகழிமடு வானீறல் வங்கு
பொந்திலறை சிந்துமுதல் புடையனோடு விரியன்
பொறிவழலை எலியரணை வர்க்கமுத லாக
நிந்தனைகள் செய்யாம உங்கள் துணை யாக
நிகழட்ட திசைகாவல் நீயொழிய வுண்டோ
புந்திமகிழ் வோடுபுவி பொங்கல் மடை யுண்ட
பூசுரன மரபிலுயர் நாகதம்பி ரானே.

5. பூசுரன் மரபன்நீ பொங்கரவ மானநீ
புவிமுற்று முன்சிரசில் தாங்கினவன் நீயே
காசிபன் மதலைநீ கம்சனுக் காகக்
காளியன் போர்பூண்ட கட்செவியும் நீயே
நேசமுட நுமதுதிரு நாமமது வோதத்
தீதுதரு விஷநாக மணுகாமல் வந்து
வீசிவிளை யாடிமரந் தேடியறை கின்ற
மேதினியி லருளுதவு நாகதம்பி ரானே

6. அருளாகி யறிவாகி யறிவுமே லாகி
அரவாகி உருவாகி ஆபரண மாகிப்
பொருளாகி யுமைவிரலில் மோதிரம தாகிப்
புற்றகம் பொற்றுலகில் உற்றமத மாகி
இருளான போதினில் நச்சரவுக் கஞ்சி
ஏழைகள் பயந்துனது தாள்மனதி லெண்ண
மருளதே யணுகாது பற்பல விஷங்களின்
வாயெயிறு கட்டியருள் நாகதம்பி ரானே.

7. நாகமே நாரர் கூவி ஆலிங்க னங்கள்
நற்பூசை பொங்கல்பால் தற்பண மளிக்க
ஆகமதிற் புளகிதங் கொண்டமிர்த மென்று
அதிகோப மானவிஷ நாகமது வுண்டு
ஏகவுரு வாகிநெடுங் கோவில்குடி கொண்டு
என்றென்று மேகிருபை தந்துதவி செய்து
பாகமக வேதநட நாகசிவ மான
பதிவாழ்வு அருளுதவு நாகதம்பிரானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பதிவாழ்வு தரமனது கிருபையது கொண்டு
படமாடி மனிதரெதிர் நடமாடி நின்று
கதியாகி ஆளிமால் சயனபா யாகிக்
காசியினில் ராகுகே தாகியுல கெங்கும்
சதியாகி வாராத தெய்வம்நீ யலவோ
தடமேவக் குயில் கூவ மடவார்கள் போற்ற
விதிமேவு கதிதாவு மதிதூவ வாழும்
விஷநாச மாகிவரும் நாகதம்பி ரானே

9. வருநாக சாதினா லறுசாதி விரியன்
வரிவண்டு வழலைநால் பனிரெண்டு தேளும்
இருவெட்டு மண்டொலி நட்டுவக்காலி
இருபது சிலந்திநாய் ஓந்தி திரிதவளை
உருவுற்ற அறணைசெவ் வட்டைபுரி குழவி
உமதிரு நாமமது வோதவக லாதோ
திருவாக வருநாக ராசனே யுமையீன்ற
செகமதனி லுறைகின்ற நாகதம்பி ரானே

10 உறையவிட மானதொரு ஆலயவி ருட்சம்
உற்றமனை புற்றுமுதல் முற்றிலுஞ் சென்று
மறையவ னிராசனென வணிகர்வே ளாளர்
வந்துனது விதிமுறையி னாலமர்ந் தாயே
இறைவன்முன் னாளிலே நாகநர ரென்று
இவ்வரிசை தந்தன ரெங்கள்துயர் மாற்ற
பறைதாள வொலியோசை நாதசுர மார்ப்பப்
பதிமேலி அருளுதவு நாகதம்பி ரானே

11. பதியனைய வேதியர்கள் தேவர்மனை தன்னிலும்
பரிவுபெறு மரசர்குல மரமதுகள் தன்னிலும்
கதிகள்தரு வணிகர்நரர் குடிகொண்ட மனையிலும்
காராளர் புற்றிலுங் கனமோ டுறைந்து
மதியுலவு செகமீது நரர் போற்றி வாழ
வடிவனைய படமதுகள் விரிவுசொலி மேவ
நிதியமென மணிமேவ வுலகாள வந்த
நிமலரணி பணியென்ற நாகதம்பி ரானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பணிகள்தரு நவரத்ன தங்கமொடு வங்கம்
காராளி தன்னிலுயர் முத்துமுத லாக
தணிகைவளர் உங்கள் மணி தங்களுக் கீடோ
சத்தியந் தப்பாத கத்துருவின் மக்காள்
அணிய நகை நல்லதென அரனுமை யுங்கண்டு
ஆபரண மாக்கியே அவனிபுக ழாக
பிணிகளொடு படுவிஷம் மாறவருள் செய்வாய்
பிரம்மமர பானகுரு நாகதம்பி ரானே.

13. பிரமாதி கிருபையொடு சரயோக நிதியே
பிசகாத குலதெய்வ சிவதேவ கதியே
அரனா ரிடத்திலே குறையாத பதியே
அடியார்க ளோடுவுற வாடிவரு துதியே
வரமாக வுங்கள் புகழ் சிரமேது தித்தித்தால்
வருவினைகள் நஞ்சுமுதல் மாற்றியருள் செய்து
சிரநாக மணிமேவ வுலகோர்கள் போற்றத்
திருவாக வருகிரண நாகதம்பி ரானே.

14. மேவலர்கள் புகழ்வாழி திரிலோகம் வாழி
வேதனுமை சரசுபதி மால்சிவன் வாழி
தேவரொடு இந்திரன் கணநாதர் வாழி
தேடரிய நாகர்குல மாநிலம் வாழி
தாவுவிழிக் காசிபன் கத்துரு வாழி
தளிர்மேவு சிரநாக மணிநீடு வாழி
பாவலர்கள் புகழ்மொழிகள் பாடினோர் வாழி
பாரிலுயர் பாக்கியம் தந்தவர்வா ழியதே

15. தந்துதவு சங்கரனுஞ் சாம்பவியும் வாழி
தக்கபுகழ் பெரியோர்கள் புலவோர்கள் வாழி
வந்துதவு சரசோதி மாலயனும் வாழி
மாதாப்பி தாக்களொடு மக்கள் மனை வாழி
சிந்திரொடு பொந்திலுறை கட்செவிகள் வாழி
சீரிலுறை காராளர் மேழியும் வாழி
புந்திமகிழ் வேடுபண் டாரியா வெளியிலுறை
புதுமைசெறி நாகம்மை வாழவா ழியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# நாகம்மை புகழ் பாமாலை

## துதி

**அப்பனே கணபதியே அம்மை உமை ஈன்றெடுத்த**
**செப்பரிய திருமகனே நாகம்மை மீது**
**நற்கவி மாலை பாட நலமருள் செய் தும்பிமுகா**
**தொப்பயனே உன்தாள் தொழுதேன் நிதம்**

## நூல்

1. அன்னை உமை ஆபரணம் ஆன தாயே
அருமை சேர் நாகமணி உடையதாயே
செம்மை நிகர் கண்ணகையின் சிலம்பு தன்னில்
திரு ஓசை நாதமெழும் திகழ்ந்த தாயே
உன்னையே நினைந் தடியேன் மாலைபாட
உறுதி கொண்டேன் நாவற்கு உணர்வு தாராய்
வண்ணமகள் பூலோகம் தாங்கும் தாயே - அம்மா
வரம் தந்து அடியார்க்கு அருள் செய்வாயே

2. ஆதிசிவன் கழுத்தினிலே மாலையானாய்
அவர் சடையும் முடிமீது குடையுமானாய்
சாதியே பலசாதி உண்டு பண்ணித்
தானொருத்தி அரசாளச் தகுதியானாய்
ஆதியிலே தேவர்களும் அசுரர் கூடி
அமிர்தமது கடைவதற்கு அறனுமானாய்
நீதி தவறா துலகை ஆளும் தாயே - தேவி
நித்தமருள் நாகம்மையாரே அருள்செய்வாயே.

3. இம்மானிலத்தில் எங்ஙனுமே உந்தன் ஆட்சி
மகிமை குறையாது உன் மணியின் மீட்சி
அம்மை உனைப் பணிபவர்க்கருளே காட்சி
அலைகடல் மாயவனுக்கு கரனும் தாட்சி
நன்மை அருள் நிதமுன்னை நம்பினர்க்கு
நலமருளும் நிலமகனே இளையகன்னி
அல்லல் பகை தீர்த்தருளும் ஆதிதேவி அம்மா
அடிதொழுதோம் நாகம்மையாரே அருள் செய்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஈசனுக்கே கங்கணமும் மாலையானாய்
இராகுநல் கேது எனும் கோள்களானாய்
பாசமற்ற மக்களுக்குப் பகையுமானாய்
பரிதிவளை புற்றுமனை வாசமானாய்
வீசுகின்ற மின்னலுக்கோர் மறைந்து வாழும்
மிக்கபுகழ் ஆலயத்தில் தெய்வமானாய்
வாசமிகு மலர் மணத்தில் மிதந்த தாயே தேவி
வண்ணமுயர் நாகம்மையரே அருள் செய்வாயே.

5. உன் நினைவு தப்பாது உலகு தன்னில்
ஓங்கி நீ சாபமிட்டால் உயிர் நில்லாது
தன்னைநிகர் தாயே உன் சந்திராதி
தானழிவார் விஷத் தாயே தீங்கு செய்தோர்
கல்லாளி மலைகளுக்குள் வாசம் செய்யும்
கருநாக தேவியரே காருமம்மா
நில்லாதே நல்லோர் முன் போற்றி செய்தேன். தேவி
நிலமகளே நாகம்மையே அருள் செய்வாயே.

6. ஊர்ந்து திரிந்துலகத்தில் நாகவர்க்கம்
உமது கீழ் ஆணையுடன் உலவுமம்மா
நீந்தி கடல் மீதினிலே மறைந்திருந்த
நீடு மன்னன் பரிசித்து அரவால் மாட்டான்
ஆய்ந்தரசி புரிகின்ற நாக லோகம்
அத்தனையும் உனதாட்சி நடக்குதம்மா
வீழ்திறந்தோர் விஷத்தாலே அனேகம் தாயே - தேவி
மெய்யடியார் எங்களுக்கும் அருள் செய்வாயே.

7. எளியோர்கள் உனது திரு புற்றைச் சுற்றி
என்றென்றும் வணங்குகின்றோம். கிருபைதாராய்
பழிகாறி உந்தனையே பதறச் செய்தோர்
பழிக்குப் பழி எடுப்பது உன் பாரமம்மா
எதிர் வந்தால் கண்டு நீ வழி விலகாய்
ஏது குறை செய்தாலும் பொறுத்திடம்மா
அழியாத தெய்வமே புவனம் போற்றும் - தேவி
அம்மை சிவ நாகம்மையே அருள் செய்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஏர் உழவர் எங்களுக்குத் தெய்வமானாய்
இடும் பொங்கல் பாலமிர்தம் உண்டு வாழ்ந்தாய்
வார் மகளீர் தங்களுக்கு வரம் கொடுப்பாய்
வரும் எதிரி பகைவனையே மாளவைப்பாய்
கார்குழல் ஒசையிட பூசை தன்னில்
கருதி நின்று படமோடு காட்சி தாரும்
சீர் வரிசை கொண்டு உனைப் போற்றுகின்றோம் - தேவி
திருமாதே நாகம்மை அருள்செய்வாயே

9. ஐயிரண்டு தலையுடை அன்னை நீயே
அவனி எனும் பூவுலகைத் தாங்கும் தாயே
பல்லிலே விஷமுடை பாவை நீயே
பணிந்து உனை நேர்ந்து நாம் போற்றுகின்றோம்
வல்வினையும் சூனியமும் ஏவல் பில்லி
வரும் எதிரி பிசாசுமுதல் ஓட வேணும்
அல்லலுறும் மக்களுக்கு அபயம் தாரும் - தேவி
அரும் புற்றுவளர் நாகம்மை அருள் செய்வாயே

10. ஒன்றெனப் ஓங்காரப் பொருளே வாவா
உமைவிரலின் மோதிரமே உடனாய் வாவா
நன்றென்று மாயவற்கு சயனாய் வாவா
நாதசுர கீதமிசை நளினாய் வாவா
சென்று பல திக்கெங்கும் கோயில் கொண்ட
செளுநாக தேவியரே திருவே வாவா
மண்டாடிக் கும்பிட்டோம் அம்மா உன்னைத் - தேவி
மருவு செறி நாகம்மையே அருள் செய்வாயே.

11. ஓங்கி எழு சந்திரனை உறுண்டை ஆக்கி
உட்கொண்ட தேவியரே உன் பாசத்தாலே
தீங்கறியேன் தினமுன்னை நாடிவந்து
திருக்கோயில் வலம்சுற்றி பணிந்தேனம்மா
ஆங்கார அதர்மத்தில் மக்களெல்லாம்
அவதியுற்று சீரளிந்து வாழுதம்மா
தாங்கி நிதம் பூலோகம் அரசு செய்யும் - தேவி
தாயே என் நாகம்மை அருள் செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஒள விடும் ஆதித்தன் அனந்தன் கார்க்கோடன் பதும்
ஆனசங்கு குழிகன் வாசுகி சங்குபாலன்
செவ்வையுறு அட்டதிற்கு உனக்குக் காலில்
தேவியே நாகருக்கு இராணியம்மா
கௌவைபிணி கடிவிஷங்கள் தீர்த்தாயே
காராளர் காணிதன்னில் குடிகொண்டனாச்சி
பொன்னி நெல் புதிர் எடுத்தும் பூசை செய்வோம்- தேவி
புகழ் நாக கன்னியரே அருள்செய்வாயே

13. இக்கணமே தாயே நீ எளுந்து ஆட
இங்குற்றோர் கண்டு மனப்பயமுநாட
சொக்கருக்கு தோன்நிறைந்த மாலையாக
தும்பிமுகன் வயிற்றுதனில் அரனுமாக
மிக்கமயில் வேலவன் முன் மிதித்திட்டாட
மிகுலிங்கத் தேகுடையாய் மேல் நின்றாட
தக்கபுகழ் நாக கன்னி உன் தாழ் பணிந்தேன் - தேவி
தாயே இவ்வேளை என்னைத் தாங்கிக் கொள்ளே

14. அம்மையே உனது புகழ் எடுத்துக் கூற
ஆகாது என்ன செய்வேன் என் அறிவு மட்டில்
இம்மை தனில் அடியேன் நான் செய்த குற்றம்
இடர் அகற்றி பிழை பொறுப்பாய் இளையகன்னி
அல்லயலில் குடியிருந்தால் அகலச் சென்று
ஆலயத்தில் பூசைகண்டு அமருமம்மா
தொல்லுலகில் மாறாத தெய்வம் நீயே - தாயே
துதித்துன்னை போற்றினேன் போற்றினேனே

15. போற்றினோம் போற்றி உந்தன் பொன்தாள் போற்றி
புகழ் பெற்ற உன்தலம் கோயில் போற்றி
ஏற்றி உனைப் பணிகின்ற ஏழை மக்கள்
என்னாளும் உன்காவலம்மா தாயே போற்றி
ஆற்றொண்ணாத் துயர் நோய்கள் அகலத்தாயே
அடியவரைக் காருமம்மா அ.ன்பு கொண்டு
போற்றியம்மா சரணங்கள் போற்றி தாயே
பொன்மகளாம் நாகம்மையரைப் போற்றினோமே

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகம்மை தாலாட்டு

1 ஆடிவாறா நாககன்னி ஆடிவாறாவு
அருளொளும்பி தேவி அம்மா ஆடிவாறாவு
நீடிய தோர் உடலசைய ஓடிவாறவு
நீல வண்ணன் தங்கை அவ ஆடிவாறாவு ஆடிவாறா நாக

2 சுற்றிச் சுற்றிப்பட மசைய சுழன்று வாறாவு
சூரியனை மறைத்துப்படமெடுத்து வாறாவு
வெற்றி எட்டு முரசதிர விளையாடி வாறாவு
விண்ணோர்கள் போற்றி செய்ய ஆடிவாறாவு ஆடிவாறா நாக

3 நீல கண்டன் மேனியிலே மாலையானாவு
நீல நிற மாயவர்க்கு குடையுமானாவு
சீறி அவசினத் தொழும்பி படம் விரித்து வாறாவு
திக்கெங்கும் ஆட்சி செய்யும் தேவி வாறாவு ஆடிவாறா நாக

4 பூசைகண்டு மக்கள் போற்ற புறப்பட்டு வாறாவு
புதுச் சட்டியிலே பாலமிர்தம் குடித்துவாறாவு
வாசமுள்ள மலர் மணத்திலே மிதந்து வாறாவு
வண்ண மகள் நாககன்னி ஆடிவாறாவு ஆடிவாறா நாக

5 தேவசபை மீதிருந்து ஓடிவாறாவு
திருமாலின் தங்கை எனும் செல்வி வாறாவு
தேவருக்கும் அசுரருக்கும் வடமுமாளவு
சீறிவிட்ட விஷம்வடிய ஆடிவாறாவு ஆடிவாறா நாக

6 நாதசுரம் கேட்டவுடன் நடுங்கி வாறாவு
நம்பினோரை அம்மை அவ கைவிடவு மாட்டாவு
வேதமோதி விண்ணோர் தொழுவிரைந்து வாறாவு
விரும்பி தொழு மானிடர்க்கு தெய்வமானாவு ஆடிவாறவு நாக

7 பட்டுக்குடை நட்டு வர்க்கம் பிடித்து வாறாவு
பாடுகின்ற அடியவரைப் பார்த்து வாறாவு
எட்டுதிற்கு காத்தருளும் என் அம்மை வாறாவு
எழுந்தாடும் நாகம்மை ஆடிவாறாவு ஆடிவாறா நாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 கொட்டுதவில் உடுக்கு ஓசை கேட்டு வாறாவு
குரவை ஒலி சத்தமுடன் ஆடிவாறாவு
பட்டுக்குடை நட்டுவர்க்கம் பிடித்துவாறாவு
பாடுகின்ற அடியவரைப் பார்த்து வாறாவு ஆடிவாறா நாக

9 தீப ஒளி கண்டு அவ சீறிவாறாவு
திருநடனக் காறி அவஆடிவாறாவு
தூபமிடும் மக்களுக்கு துணையுமானாவு
துதித்து நிதம் பணிவோர்க்கு தெய்வமுமானாவு ஆடிவாறா நாக

10 நம்பினோரைக் காத்திடவே ஓடிவாறாவு
நலமருள எங்களுக்கு அன்னையானாவு
மண்டாடு மக்களையும் கண்டு வாறாவு
மகிழ்ச்சியுடன் பூசைதனை ஏற்றுக் கொண்டாவு ஆடிவாறா நாக

**வேறு**

நாக கன்னி தாயே அம்மா நாகதேவித் தாயே அம்மா
நலமுடனே வரமருளும் நாககன்னித் தாயே

பூலோகம் தன்னில் எங்கும் நாகதேவித் தாயே - அம்மா
புவி ஏழும் உன் காவல் நாககன்னித் தாயே

கண்கண்ட தெய்வமம்மா நாக தேவித் தாயே - அம்மா
கருணைகொடு தேவியம்மா நாககன்னித் தாயே

அண்டரெண்ட பாதாளம் நாகதேவித் தாயே - அம்மா
அமரர் சபை மீதினிலும் நாககன்னித் தாயே

கொண்டாடி மகிழ்ந்திடவே நாகதேவித் தாயே - அம்மா
குணமுடனே வாருமம்மா நாககன்னித்தாயே

வண்டார் குழலியரே நாகதேவித் தாயே - அம்மா
வரம் கொடுக்கும் தாயாரே நாககன்னித் தாயே

வாசமுள்ள மலர் மணத்தில் நாகதேவித் தாயே - அம்மா
வண்ணமகள் குடியிருப்பா நாககன்னித் தாயே

மாலை கட்டி ஆடுவோம் நாகதேவித் தாயே - அம்மா
மாலை காலை பூசைசெய்வோம் நாககன்னித் தாயே

ஆலயத்தில் நீ இருந்து நாகதேவித் தாயே அம்மா
உன் அடியவரைக் கார் தாயே நாகன்னித் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதசுரமேள ஒலிநாக தேவி தாயே அம்மா
நாலுதிற்கும் முழங்குதம்மா நாககன்னித் தாயே

வேதியரும் பூசகரும் நாகதேவித்தாயே அம்மா
வெண்சாமரை வீச நாககன்னித் தாயே

ஆதிமுதல் இன்று வரை நாகதேவித்தாயே அம்மா
ஆதரிக்கும் தெய்வமம்மா நாககன்னித் தாயே

படம் விரித்து எழுந்தாடி நாகதேவித் தாயே - அம்மா
பயம் கொண்டு உனைவணங்க நாககன்னித் தாயே


இடர் பகையும் வினைநோயும் நாகதேவித்தாயே - அம்மா
எமை அணுகாக்கார் தாயே நாக கன்னித் தாயே

ஆதிசிவன் உமை தனக்கு நாக தேவித் தாயே அம்மா
ஆபரணம் ஆனவளே நாககன்னித் தாயே

போற்றி உமை சரணமிட்டோம் நாகதேவித்தாயே அம்மா
பொங்கல் பூசை ஏற்றிடம்மா நாக கன்னித் தாயே

போற்றி போற்றித் தாயாரே நாகதேவித் தாயே அம்மா
பொன்னடிகள் போற்றியம்மா நாககன்னித் தாயே

சரணமிட்டோம் சரணமம்மா நாகதேவித் தாயே அம்மா
தாழ் சரணம் சரணமதே சரணம் சரணம் தாயே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகதம்பிரான் வாழி

வேலவர்கள் புகழ் வாழி திரிலோகம் வாழி
வேதனுமை சரசுபதி மால்சிவனும் வாழி
தேவரோடு இந்திரன் முனிவோர்கள் வாழி
தேடரிய நாகர் குலம் மாநிலம் வாழி
தாவுவிழிக் காசிபன் கத்துரு வாழி
தளிர்மேவு சிரநாகம் புகழோங்க வாழி
பாவலர்கள் மொழி வாழி பாடினோர் வாழி
பாரிலுயர் பாக்கியம் நீடுபுகழ்வாழி
தந்துதவு சங்கரனும் சாம்பவியும் வாழி
தக்கபுகழ் பெரியோர்கள் புலவோர்கள் வாழி
வந்துதவு நான்முகன்மாலையனும் வாழி
மாதாபிதா வினொடுமக்கள் மனைவாழி
சிந்தினொடு பொந்திலுறை கட்செவியன் வாழி
சீரிலுறை காராளர் மேழியும் வாழி
புத்து மகிழ் பண்டாரியா வெளியிலுறை வாழி
புதுமை செறி நாகம்மை வாழ வாழியதே.

**மங்களம்**

பூலோக மீது தோன்றத் தமிழளித்த
ஆலால முண்டோன் அடியினை தாழ் மங்களமே
சீலமுறுமுமையாள் திருமாங்கல்யம் மங்களமே
பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமன் லெட்சுமிக்கும்
பூப்பழகு மேனி புன்னை நிணல் காளியர்க்கும்
காற் சிலம்பு அன்னை கண்ணகைக்கும் மங்களமே
அன்னை மகமாரி ஆதிசிவ வயிரவர்க்கும்
சூரியர் சந்திரர்க்கும் சுழட்சியுறு நவ நாதருக்கும்
கற்புள்ள அன்னையர்க்கும் கன்னியர்க்கும் மங்களமே
அற்புதங்கள் காட்டும் அம்மையர்க்கும் மங்களமே
நாகம்மை வாழும் நற்பதிகள் மங்களமே
மங்களம் மங்களமே மாதாப் புகழோங்க மங்களமே

**சுபம்**

**நாகம்மை புகழ் மாலை முற்றிற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னையே நீயம்மா

1. கன்னியே நீயம்மா - நாககன்னியே நீயம்மா
   கருத்துடன் எம்மைக் காத்திட வாரும் - கன்னியே நீயம்மா

2. அன்னையே நீயம்மா நாகத்தம்மையே நீயம்மா
   அனுதினமுன்னைத் தொழுவிட வந்தோம் அன்னையே நீயம்மா கன்னியே நீயம்மா நாகக்

3. சங்கரள் தேவி பங்கயமாதே அன்னையே நீயம்மா
   சரப்பணி மாலை கங்கண மானாய் அன்னையே நீயம்மா நாகக்

4. பாற்கடல் தன்னில் மாயன் தனக்கு அன்னையே நீயம்மா தம்மையே
   பாய்குடை யாகி அலைமீதமர்ந்த அன்னையே நீயம்மா கன்னியே நீயம்மா நாகக்

5. தேவர்கள் போற்றும் மாமறை மாதே அன்னையே நீயம்மா
   செல்வியே வையம் தாங்கிடும் தாயே அன்னையே நீயம்மா கன்னியே நீயம்மா நாகக்

6. நாகர்த் தமக்கொரு பேரேறேர் ரரசி அன்னையே நீயம்மா
   நம்பினோம் உம்மை எங்களைக் காரும் அன்னையே நீயம்மா அன்னையே நீயம்மா நாகத்

7. ஆலயம் தேடி ஓடி யே வந்தோம் அன்னையே நீயம்மா
   ஆடியே வந்து நாடிய வரம் தா அன்னையே நீயம்ம கன்னியே நீயம்மா நாகக்

8. பூமடை தந்தோம் பொங்கலும் மிட்டோம் அன்னையே தாயம்மா
   புதுமண்சட்டியில் அமிர்தமும் வைத்தோம் அன்னையே நீயம்மா கன்னியே நீயம்மா நாகக்

9. அன்புடன் ஏற்று ஆசிகள் தாரும் அன்னையே நீயம்மா
   அடியார் ரெங்கள் நொடிநோய் தீரும் அன்னையே நீயம்மா அன்னையே நீயம்மா நாகக்

10 பொற்பதம் சரணம் போற்றினோம் சரணம் பொன்டி சரணமம்மா
   புனிதமுடனே நாகம்மை பொற்றி போற்றினோம் போற்றியம்மா அன்னையே நீயம்மா நாகக்

உ

## இயமன் வெட்டு

ஓம் ஆம் உம் நம் நம் சிங்சிங் உங்ங வங்ங றிங்ஙா றிங்ஙா
வா வா கால கால தொண்டாயு தட்சணா என் சத்துரு
உயிர் பதற இடி இடி இயமா அம் நம் இவ் உவ் இவர் மீதில்
ஏவல் பில்லிக்கு அஞ்சாதே இவன் பெலிக்கு இணங்காதே
எதிரி கட்டுக்கு நில்லாதே ஆவேசு ஆவேசு ஆதிசிவன் உன்னை
எரித்தாற் போலே அவனை எரி எரி இயமா பிடி பிடி
எறி எறி பாஷம் சுடுசுடு அவ் அவ் றிங்றிங் மம்மம் மாயமாய
சிங்சிங் சிவனாணை அம்அம் ஆதிபரமே பரியானை
ஓம் ஓம் உச்சிட்ட கணபதியாணை அரி அரி ஆதி மகா விஷ்ணு
வாணை அறுஅறு அறுமுகனாணை மூடு மூடு மும்மூர்த்தியாணை
எரி எரி இளைய பெருமானாணை அசி அசிரசி சித்த சங்ஙார பாஷங் கொண்டு
தாக்கு தாக்கு தருமராணை தடையறமுறிய வேசுவாக

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் நா.விநாயகமூர்த்தி அவர்களின் இதர வெளியீடுகள்

## ஆக்க தொகுப்பு நூல்களும்:-

| | |
|---|---|
| திருமுருகன் திருப்பாடற் திரட்டு ஆக்கம் | 210.00 |
| குலதெய்வ வழிபாட்டுப் பாடல்கள் (ஆக்கமும் தொகுப்பும்) | 310.00 |
| முத்தான முருகன் தோத்திரப்பாடல்கள் | 150.00 |
| உகந்தைமலைக் குழந்தை முருகன் பாமாலை | 70.00 |

## தொகுப்பு நூல்கள்:-

| | |
|---|---|
| வைகுந்த மோட்சமாலை(ஆக்கமும் தொகுப்பும்) | 70.00 |
| கழுகுமலைப் பத்து | 100.00 |
| சிவ செந்திமாலை | 60.00 |
| ஆதிமூல கெருடப்பத்து | 80.00 |
| சிவமுத்து மணிமாலை (ஆக்கமும் தொகுப்பும்) | 155.00 |
| சித்தர் ஞான வாலைக்கும்மி | 120.00 |
| வயிரவர் காவியப்பாடல்கள் | 70.00 |
| சனி பகவான் துதி தோத்திரப் பாடல்கள் | 70.00 |
| திருவாசகத் தேன்துளிகள் | 100.00 |
| சிவமுத்துமாரியம்மன் குளுர்த்திப்பாடல்கள் | 135.00 |
| காளியம்மன் காவியகும்மிப்பாடல்கள் (ஆக்கமும் தொகுப்பும்) | 145.00 |
| திருகோயில் சித்திரவேலாயுத சுவாமி பேரில் போற்றிப் பாமாலை | 60.00 |
| மண்டூர் முருகன் பவளமணி மாலை | 75.00 |
| வெருகல் பதிவுறை வேலவர் போற்றிப் பாமாலை | 75.00 |
| நாகம்மை புகழ் மாலை | 100.00 |
| பேச்சியம்மன் காவியம், தாலாட்டு, கும்மிப்பாடல்கள் | 110.00 |

மேற்படி நூல்கள் தேவையானோர்
கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற முடியும்

ஈஸ்வரி இல்லம்
மாரியம்மன் கோயில் வீதி,
சேனைக்குடியிருப்பு-01B
077-6538667

விக்டரி அச்சகம் கல்முனை 0770643990

விலை: 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org